வாக்குமூலம்

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி

சி.சி.எண்.25/17

வழக்கு சாட்சி - அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்கணேஷ் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பெருமாள் | தொழில் | சுய தொழில் |
| கிராமம் | பிசிபட்டி | சமயம் | |
| தாலுக்கா | <u>தேனி</u> | வயது | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.24

**( 1,2** எதிரிகள் ஆஜர் இல்லை**. 1, 2** எதிரிகள் சார்பில் கு**.**வி**.**மு**.**ச**.** பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**.)**

அரசு தரப்பில் முதல் விசாரணை

அசா1 கணேசனை தெரியும். நான் பிசிபட்டி அரசு நகரில் வசித்து வருகிறேன். 13.6.16 அன்று மதியம் 12 மணிக்கு நான் எனது தெருவில் நடந்து சென்றுக்கொண்டிருந்த போது எனக்கு பக்கத்து தெருவான கணேசன் என்பவர் வீட்டின் பூட்டு உடைந்திருந்தது. அப்போது அவர் சென்னையில் இருந்தார். நான் அவருக்கு போன் செய்து கதவல் தெரிவித்தேன். அதற்கு அவர் என்னை வீட்டிற்குள் சென்று பார்க்குமாறு கூறினார். நான் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லிவிட்டு வீட்டிற்குள் சென்று பார்த்தேன். நாங்கள் சென்று பார்த்த போது வீட்டின் மெயின் கதவு உடைந்திருந்தது. இரண்டு பெட்ரூமின் கதவுகளும் உடைந்திருந்தது. பீரோ உடைந்திருந்தது. மேற்படி தகவலை கணேசனிடம்நான் தெரிவித்தேன். கணேசன் மறுநாள் காலையில் வந்து காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். அதன்பின்னர் நகை திருடியவர்களை பிடித்துவிட்டதாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.